மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 01 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.04/2021
அ.வ.எண்.395/2012

1. கே.வையாபுரி
2. கே.பெரமகவுண்டர்
3. மயில் (எ) மயிலி ...மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள்

/எதிராக/

கே.பழனியப்பன் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 30.09.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.குருசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

இவ்வழக்கானது கடந்த 26.08.2021ல் மனுதாரரான பி.வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றையதினம் மனுதாரருக்கு கடுமையான காய்ச்சல் மற்றும் குளிர்சுரம் காரணமாக உடல் நடுக்கம் ஏற்பட்டு படுத்த படுக்கையாக இருந்ததால் அன்றைய தேதியில் ஆஜராக முடியவில்லை. அதன் பின்னர் உடல்நிலை சரியானதற்கு பின்னிட்டு வழக்கறிஞரை சந்தித்த போது தான் மனுதாரர் 26.08.2021ல் ஆஜராகாததால் பி.வா.சா.1ன் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது தெரிய வந்தது. எனவே பி.வா.சா.1ன் சாட்சியத்தை திறக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் மனுதாக்கல் செய்துள்ளார்கள்.

2) எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனுதாரருக்கு கடுமையான காய்ச்சல் மற்றும் குளிர்சுரம் காரணமாக உடல் நடுக்கம் ஏற்பட்டு படுத்த படுக்கையாகி விட்டார் என்பது பொய். அவர் திடகாத்திரமாக இருந்து அன்றாட செயல்களை செய்து கொண்டிருந்தார். அன்று காலையில் நீதிமன்றமும் வந்திருந்தார். ஆனால் நீதிமன்றத்தில் அழைக்கும்போது உள்ளே வரவில்லை. அவர் தரப்பு வழக்கறிஞரும் வரவில்லை. கடந்த 25.02.2021 முதல் 13 முறை குறுக்கு விசாரணைக்கு போடப்பட்டும் அவர் ஆஜராகாததால் அவரது குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு அவரது தரப்பு இதர சாட்சியங்கள் ஏதும் இருந்தால் விசாரிப்பதற்காக 02.09.2021 மற்றும் 20.09.2021 ஆகிய தேதிகளில் வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில் மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். ஒவ்வொரு வாய்தாவுக்கும் நீதிமன்றத்திற்கு வந்து வழக்கின் நிலையை கவனித்து வரும் மனுதாரர்கள் வழக்கு முடிவுக்கு வரும் நிலையில் வழக்கை காலதாமதப்படுத்த இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் இவ்வழக்கானது கடந்த 26.08.2021ல் மனுதாரரான பி.வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்தது எனவும், அன்றையதினம் மனுதாரருக்கு கடுமையான காய்ச்சல் மற்றும் குளிர்சுரம் காரணமாக உடல் நடுக்கம் ஏற்பட்டு படுத்த படுக்கையாக இருந்ததால் அன்றைய தேதியில் ஆஜராக முடியவில்லை எனவும், அதன் பின்னர் உடல்நிலை சரியானதற்கு பின்னிட்டு

வழக்கறிஞரை சந்தித்த போது தான் மனுதாரர் 26.08.2021ல் ஆஜராகாததால் பி.வா.சா.1ன் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது தெரியவந்தது எனவும், எனவே பி.வா.சா.1ன் சாட்சியத்தை திறக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு கடுமையான காய்ச்சல் மற்றும் குளிர்சுரம் காரணமாக உடல் நடுக்கம் ஏற்பட்டு படுத்த படுக்கையாகி விட்டார் என்பது பொய் எனவும், அவர் திடகாத்திரமாக இருந்து அன்றாட செயல்களை செய்து கொண்டிருந்தார் எனவும், அன்று காலையில் நீதிமன்றமும் வந்திருந்தார் எனவும், ஆனால் நீதிமன்றத்தில் அழைக்கும்போது உள்ளே வரவில்லை எனவும், அவர் தரப்பு வழக்கறிஞரும் வரவில்லை எனவும், கடந்த 25.02.2021 முதல் 13 முறை குறுக்கு விசாரணைக்கு போடப்பட்டும் அவர் ஆஜராகாததால் அவரது குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு அவரது தரப்பு இதர சாட்சியங்கள் ஏதும் இருந்தால் விசாரிப்பதற்காக 02.09.2021 மற்றும் 20.09.2021 ஆகிய தேதிகளில் வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது எனவும், இந்நிலையில் மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் எனவும், ஒவ்வொரு வாய்தாவுக்கும் நீதிமன்றத்திற்கு வந்து வழக்கின் நிலையை கவனித்து வரும் மனுதாரர்கள் வழக்கு முடிவுக்கு வரும் நிலையில் வழக்கை காலதாமதப்படுத்த இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் வழக்கில் 11.01.2021ல் பி.வா.சா.1ன் முதல்விசாரணை முடிக்கப்பட்டு, குறுக்கு விசாரணைக்காக 18.01.2021ல் வாய்தா போடப்பட்டுள்ளது தெரியவருகிறது. அன்றைய தினம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போட்டதால் மீண்டும் 23.01.2021ல் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதன் பின்னர் பி.வா.சா.1 ஆஜராகும்போது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு வாய்தா கோரியுள்ளதும், ஒரு சில வாய்தாக்களில் பி.வா.சா.1 ஆஜராகாததும் தெரியவருகிறது.

இந்நிலையில் 25.05.2021 ல் பி.வா.சா.1 பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டும், அதன் பின்னர் 22.03.2021 ல் பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. அதன்பின்னர் கொரானா காலமாக நீதிமன்றம் செயல்படாமல் இருந்துள்ளதும், இறுதியாக 26.08.2021 ல் பி.வா.சா.1 ஆஜராகாததால் பி.வா.சா.1 ன் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. எனவே இருதரப்பிலும் வழக்கினை காலதாமதப்படுத்தி வந்துள்ளது தெரியவருகிறது.

(iv) விசாரணை நீதிமன்றத்தில் தான் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய எதிர்தரப்பினருக்கு வாய்ப்பு வழங்க முடியும் என்பதாலும், மனுதாரர்கள் தங்களுடைய வழக்கை நிரூபிக்க பி.வா.சா.1 தன்னை குறுக்கு விசாரணைக்கு உட்படுத்திக் கொள்ள ஒரு வாய்ப்பு வழங்குவது நீதிக்கு உகந்தது என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இருந்தபோதும் 26.08.2021 ல் கண்டிப்பாக பி.வா.சா.1 ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டிருந்த நிலையில் பி.வா.சா.1 ஆஜராகாமல் சாட்சியம் முடிக்கப்பட்டு, அதனை திறக்க இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரையத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு ரூ.500/–செலவுத்தொகையாக செலுத்தும் பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு ரூ.500/–யை செலவுத்தொகையாக . 07.10.2021 க்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க.08.10.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 01 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்  சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்  சான்றாவணங்கள்:– இல்லை</u>

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.